DFCC BANK
Keep Growing

# US வீசா கொடுப்பனவுகள்

முக்கிய தகவல்கள் ஆவணம்

# DFCC வங்கியிள் US வீசா கொடுப்பனவுகள் பற்றி நீங்கள் அறிந்திருக்க வேண்டியவை

நீங்கள் எம்முடன் வீசா கொடுப்பனவு ஒன்றைச் செய்யலதற்குத் திட்டமிட்டிருந்தால், அதன் மூலம் நீங்கள் அதிகபட்ச அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ள உதவும் வகையில் அதன் செயற்பாட்டுச் சிறப்பம்சங்களைப் நாம் உங்களுக்கு இத்தால் அறியத்தருகின்றோம்.

உள்ளடக்கம்


| இல. | தலைப்பு | பக்க இல. |
|---|---|---|
| 1. | US வீசா கொடுப்பனவு | 3 |
| 2. | DFCC வங்கியின் மூலம் US வீசா கட்டணத்தைச் செலுத்துவது எப்படி? | 3 |
| 3. | கொடுப்பனவைச் செய்வதற்கு எத்தகைய முறை பயன்படுத்தப்பட வேண்டும்? | 3 |
| 4. | கொடுப்பனவைச் செலுத்த வரும்போது கொண்டுவரப்பட வேண்டிய ஆவணங்கள் எவை? | 3 |
| 5. | கொடுப்பனவைச் செய்யும்போது கவனிக்க வேண்டிய முக்கிய காரணிகள் எவை? | 3 - 4 |
| 6. | கொடுப்பனவு பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் உங்களுக்கு என்ன கிடைக்கும்? | 4 |
| 7. | செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல் எப்போது செயற்படுத்தப்படும்? | 4 |
| 8. | எம்முடன் தொடர்புகொள்ளுதல் | 4 |

## 1. US வீசா கொடுப்பனவு

US வீசா கொடுப்பனவு என்பது குடிவரவு அல்லாத வீசாவுக்கு விண்ணப்பிக்கும்போது ஐக்கிய அமெரிக்கத் தூதரகத்தினால்/தூதரக அலுவலகத்தினால் அறவிடப்படும் கட்டணமாகும்.

DFCC வங்கி வீசா கொடுப்பனவுகளை CGI பெடரல் இன்கோப்பரேஷன் சார்பில் கையேற்கின்றது. US வீசா கொடுப்பனவுகளை எந்தவொரு DFCC வங்கிக் கிளையிலும் திங்கள் முதல் வெள்ளி வரை பி.ப. 3.00 மணிக்கு முன்னர் செலுத்தலாம்.

## 2. DFCC வங்கியின் மூலம் US வீசா கட்டணத்தைச் செலுத்துவது எப்படி?

உங்கள் தேவையை நிறைவேற்றுவதற்கு திங்கள் முதல் வெள்ளி வரை பி.ப. 3.00 மணிக்கு முன்பதாக அருகிலுள்ள DFCC வங்கிக் கிளையொன்றிற்குச் செல்லும்படி உங்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

நீங்கள் CGI பண வைப்பு அறிவுறுத்தல்கள் கடிதத்தை மட்டுமே கொண்டுவர வேண்டும் என்பதுடன், கிளையில் DFCC வங்கி ஏனைய வைப்புச் சீட்டு என்று குறிப்பிடப்பட்ட படிவத்தினைப் பூர்த்திசெய்ய வேண்டும்.

வார இறுதி நாட்களில் கொடுப்பனவுகளுக்கு இடமளிக்கப்பட மாட்டாது.

## 3.கொடுப்பனவைச் செய்வதற்கு எத்தகைய முறை பயன்படுத்தப்பட வேண்டும்?

கருமபீம பண வைப்புகள் மாத்திரம்.

## 4. கொடுப்பனவைச் செலுத்த வரும்போது கொண்டுவரப்பட வேண்டிய ஆவணங்கள் எவை?

ஒன்லைன் விண்ணப்ப நடைமுறையின் மூலம் பெறப்பட்ட உங்கள் CGI பண வைப்பு அறிவுறுத்தல்கள் கடிதத்தை மட்டுமே கொண்டுவர வேண்டும்.

## 5. கொடுப்பனவைச் செய்யும்போது கவனிக்க வேண்டிய முக்கிய காரணிகள் எவை?

- சகல பிரிவுகளிலும் வீசா விண்ணப்பம் செயற்படுத்தல் கட்டணம் மீளப்பெற முடியாததாகும். .
- வைப்புச் செய்வதற்குச் சரியான பணத் தொகை கொண்டுவரப்பட வேண்டும்.
- பணத் தொகையானது உள்நாட்டு நாணயத்தில் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.
- CGI தொடர்பு இலக்கம் DFCC வங்கி – ஏனைய வைப்புச் சீட்டில் சரியாகவும் தெளிவாகவும் எழுதப்பட வேண்டும்.
- வைப்புச் செய்பவரின் விபரங்களும் கையொப்பமும் அச் சீட்டில் நிரப்பப்பட வேண்டும்.

- CGI பண வைப்பு அறிவுறுத்தல்கள் கடிதத்தில் தொடர்பு இலக்கத்தின் செல்லுபடியாகும் காலம் அச்சிடப்பட வேண்டும். காலாவதித் திகதியானது பண வைப்புச் செய்யப்பட்ட திகதியாக அல்லது அதற்குப் பிந்திய ஒரு திகதியாக இருக்க வேண்டும்.
- காலாவதியான திகதிகளைக் கொண்ட கொடுப்பனவுகளை வங்கி ஏற்றுக்கொள்ள மாட்டாது.
- ஏற்புடைய அமெரிக்க டொலருக்கான குறித்த பரிவர்த்தனை விகிதத்தை அறிய, www.ustraveldocs.com/lk. என்ற வலைத்தளத்தில் பிரவேசியுங்கள்.
- US வீசா கொடுப்பனவுச் சேவை மற்றும் கட்டண வீதங்கள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு, www.dfcc.lk என்ற வலைத்தளத்தில் பிரவேசியுங்கள்.

## 6. கொடுப்பனவு பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் உங்களுக்கு என்ன கிடைக்கும்?

DFCC வங்கி – ஏனைய வைப்புச் சீட்டின் உறுதி செய்யப்பட்ட வாடிக்கையாளர் பிரதியும் CGI பண வைப்பு அறிவுறுத்தல்கள் கடிதமும் ஏதேனும் மீதிப் பணமும் உங்களுக்கு மீளளிக்கப்படும்.

கொடுப்பனவு ஏற்றுக்கொள்ளப்பட்டதற்காக ஏதேனும் தொடர்பு இலக்கத்தை அல்லது பற்றுச்சீட்டு இலக்கத்தை வங்கி வழங்காது.

கொடுப்பனவு இற்றைப்படுத்தப்பட்ட பின்னர், அதே தொடர்பு இலக்கத்தை நீங்கள் உட்பதிய வேண்டும்.

## 7. செய்யப்பட்ட கொடுப்பனவு எப்போது செயற்படுத்தப்படும்?

பி.ப. 3.00 மணிக்கு முன் செய்யப்படும் சகல கொடுப்பனவுகளும் வீசா கொடுப்பனவு அமைப்பில் இற்றைப்படுத்தப்படும். வாடிக்கையாளர்கள் அடுத்த வேலை நாளில் மு.ப. 11.00 மணிக்குள் அவற்றைப் பார்வையிடலாம்.

கொடுக்கல் வாங்கல் ஒரு வெள்ளிக் கிழமையில் பி.ப. 3.00 மணிக்கு முன் மேற்கொள்ளப்பட்டால், அடுத்துவரும் திங்கட் கிழமை மு.ப. 11.00 மணிக்குள் அதனைப் பார்வையிடலாம் என்பதைத் தயவுசெய்து கவனிக்கவும்.

## 8. எம்முடன் தொடர்புகொள்ளுதல்

+94(11)2350000 என்ற எமது 24 மணிநேர தொடர்பு நிலைய தொலைபேசி இலக்கத்தினூடாக அல்லது info@dfccbank.com என்ற மின்னஞ்சல் மூலம் நீங்கள் எம்முடன் தொடர்புகொள்ளலாம். அத்தோடு எமது வலைத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு கிளைக்கு விஜயம் செய்வதனூடாகவும் எம்முடன் தொடர்புகொள்ள முடியும்.